


## ரியாத்- தமிழ் த.்.வா ஒன்றியம் நடாத்திய ரமழான் மாத விஷேட போட்டியின் முடிவுகள்

அல்லாஹ்வின் பேரருளால் 1433 ரமழான் மாதத்தில் எமது ஒன்றியம் நடாத்திய போட்டியின் பரிசளிப்பு விழா சென்ற 16.01.1434 வெள்ளிக் கிழமை ரியாத் மாநகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸவுதி அரேபியாவின் பல பகுதிகளிலிருந்தும், இலங்கை, இந்தியா, கட்டார், துபாய் போன்ற வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமான சகோதர சகோதரிகள் இப்போட்டியில் பங்குபற்றினர். அவர்களுள் சகல வினாக்களுக்கும் சரியான பதிலளித்து 100 புள்ளிகளைப் பெற்ற எழுவர் சீட்டிழுப்பு மூலம் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் 99, 98, 97 புள்ளிகளைப் பெற்றவர்களும் பரிசு பெறத் தகுதியானவர்களாகத் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 35 பேர் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். **முதல் பரிசான 1200 ரியால்களை இலங்கையைச் சேர்ந்த சகோதரி உம்மு ஹம்னா** தனதாக்கிக்கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போட்டியில் பங்கு பற்றி பரிசு பெற்ற, பரிசு பெறத் தவறிய சகல சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் சிறப்புற இப்போட்டியை நடாத்துவதற்காக எமக்கு பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் த.்.வா ஒன்றியம் மனமார்ந்த நன்றியைத் தெரிவுத்துக்கொள்கின்றது.

வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் சத்தியத்தைக் கற்று அதன்படி செயலாற்றும் நற்பாக்கியத்தைத் தருவானாக.

இப்படிக்கு
போட்டிக் குழு சார்பாக முஆஸ் ஸித்தீக்
தமிழ் த.்.வா ஒன்றியம்,
ரியாத்.
28.01.1434

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com